பக்கங்கள் 6 விலை சதம் 40

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
1978-1-16
PERIODICALS DIVISION
LIBRARY

ஈழநாடு
THE EELANAADU

மலர் 19 தை 3 லபர் 6 இதழ் 337
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 16-1-78

வாங்கி பாவியுங்கள்
LALA SOAP
LALA SOAP INDUSTRY ATCHUVELY
லாலா நீல சோப்
எல்லாக் கடைகளிலும் விற்பனையாகின்றது.
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி. தரன்-

## ஸிரியா வாங்கிய இந்தியப் படங்கள்

சென்னை, ஜன. 15

இங்கு நடைபெறும் சர்வதேச திரைப் படவிழாவில் கலந்து கொண்ட ஸிரியா ஏழு பாரததிரைப்படங்களை இன்று விலைக்கு வாங்கியது. இது சம்பந்தமாக, இரண்டு லட்சத்து இருபதினாயிரத்து ஐநூறு ரூபா ஒப்பந்தமொன்று இன்று கைச்சாத்திடப் பட்டது.

ருமேனியா, இரண்டாயிரம், அமெரிக்க டாலருக்கு கன்னடப்படமொன்றை வாங்கியது. செக்கோஸ்லோவேக்கியாவும் சில இந்தியப் படங்களை வாங்குவதில் அக்கறை காட்டியது.

# ரூ.19கோடி கடன்உதவி இந்தியா வழங்குகிறது

புதுடில்லி, ஜன. 15

**இலங்கைக்கு இந்தியா 19 கோடியே 20 லட்சம் ரூபாவை கடனாக வழங்கும்.**

**இக்கடன் உதவி மூலம் இந்தியாவிலிருந்து பஸ்கள், ரயில் பெட்டிகள், என்ஜின்கள், லொறிகள், கட்டிடப் பொருட்கள், கைத்தொழில் மூலப்பொருட்கள் ஆகியன இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும்.**

இந்தியாவில் தங்கியுள்ள நிதி அமைச்சர் திரு. மெல் இந்திய நிதி அமைச்சர் திரு. எச். எம். பட்டேலுடனும் வர்த்தகப் பிரமுகர்களுடனும் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்தே இக்கடன்உதவி வழங்கப்படுகிறது.

இத்தகவல்களை இலங்கை நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல் இங்கு நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் வெளியிட்டார்.

இக்கடனை இலங்கை 5 வீத வட்டியுடன் 15 ஆண்டுகளுக்குள் திருப்பிக்கொடுக்க வேண்டும் 3 ஆண்டு காலசலுகையும் வழங்கப்பட்டுள்ளது.

### 50 ஆயிரம் தொன் கோதுமை

இக்கடன் உதவியுடன், 50 ஆயிரம் தொன் கோதுமையையும் இந்தியா இலங்கைக்கு கடனாக வழங்குகிறது.

## ஜப்பானில் பூமிஅதிர்ச்சி: 10 பேர் பலி

டோக்கியோ, ஜன. 15

ஜப்பானில் நேற்று ஏற்பட்ட பூமிஅதிர்ச்சியை அடுத்து 10 பேர் பலியாகினர் என்றும் 12 பேரைக் காணவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

ஓஸாஸா நகரே இப் பூமி அதிர்ச்சியினால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. [இ]

## விஸ்வமடு அகதிகள் போதிய வசதியின்றி அவதி

[யாழ்ப்பாணம்]

வன்செயல்களினால் பாதிப்புற்று, விஸ்வமடுப் பகுதியில் குடியேறிய 175 குடும்பங்களுக்கு இதுவரை, அரசு ஒரு வாரகாலத்துக்கு மட்டுமே பங்கீட்டு உணவுப்பொருட்களை வழங்கியுள்ளது. நீர்விநியோகமும் ஒருசிலதினங்களே நடைபெற்றன. இதுகுறித்து அவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இவர்களுக்கு அரசு, எந்த வழியையும் இதுவரை செய்து கொடுக்காமையினால் அவர்கள் மத்தியில் பெரிதும் அதிருப்தி நிலவுகின்றது. பிள்ளைகளுக்கு பாடசாலை வசதி கிடையாது. வைத்தியவசதிகள் இல்லை. காணி வழங்கியதற்கான அத்

(6-ம் பக்கம் பார்க்க)

## "இந்திரா காந்தியை கொலைசெய்யும் நோக்கம் இல்லை!"

### பத்ராவுக்கு தடுப்புக்காவல்

புதுடில்லி, ஜன 15

'முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தியைக் கொலை செய்யும் நோக்கம் எனக்கு இருக்கவில்லை. கொலைசெய்யும் நோக்கத்துடன் நான் கைத்துப்பாக்கி வைத்திருக்கவில்லை என்று முகாரிலால் பத்ரா (55 வயது) பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு பழைய டில்லியில் நடைபெறவிருந்த ஒரு பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள வந்திருந்த திருமதி இந்திராகாந்தியைக் கொலைசெய்யும் நோக்குடன் அவர் வந்த காரை நோக்கி கைத்துப்பாக்கியால் குறி வைத்ததாக பத்ரா கைதுசெய்யப்பட்டார்.

புதுடில்லி மாஜிஸ்திரேட் முன்னிலையில் பத்ரா இன்று ஆஜர் செய்யப்பட்டபோது இரண்டுநாட்கள்வரை தடுப்புக்காவலில் வைக்குமாறு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

பொலிசாருக்கு பத்ரா அளித்த வாக்குமூலத்தில் 'நான் வைத்திருந்த கைத்துப்பாக்கி மக்கள் கூட்டத்தில் தவறிவிழுந்துவிடுமோ என்ற எண்ணத்தில் கைத்துப்பாக்கியை காற்சட்டைப் பையிலிருந்து வெளியே எடுத்தேனே தவிர, கொலைசெய்யும் நோக்கம் எதுவும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

## "தமிழர் உரிமையும், கிழக்கு அபிவிருத்தியும் 2 ஆண்டில் கிடைக்காவிடில் ராஜினமா செய்வேன்!"

### அளவெட்டியில் திரு. எம். கனகரத்தினம்

[யாழ்ப்பாணம்]

**"பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையில் தமிழ் பேசும் மக்களுக்கு நிச்சயம் சுபீட்சம் கிடைக்கும். இரண்டு வருட காலத்தில் கிழக்கு மாகாண அபிவிருத்தியும், தமிழர் உரிமையும் கிடைக்காவிடில் நான், எம். பி. பதவியை ராஜினமாச் செய்வேனென்று எனது தொகுதி மக்களுக்கு உறுதியளித்துள்ளேன்."**

அளவெட்டியில் நடந்த காங்கேசன்துறைத்தொகுதி ஐக்கிய தேசியக்கட்சி மத்தியகுழுக் கூட்டத்தில் உரையாற்றிய பொத்துவில் எம். பி. திரு. எம். கனகரத்தினம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

காங்கேசன்துறை யு. என். பி. பிரதம அமைப்பாளர் திரு. எஸ். கே. என். சிவராசாவின் அழைப்பின்பேரில் அவரது சொந்த ஊரான அளவெட்டிக்கு திரு. கனகரத்தினம் வந்துள்ளார்.

திரு. சிவராசா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. கனகரத்தினம் மேலும் கூறியதாவது:

'நான் ஒரு அரசியல்வாதியல்ல. அரசியலை நான் பிழைப்பாகவும் கொண்டவனல்ல. இக்கட்டான நிலையில்தான் தேர்தலில் போட்டியிட வேண்டியநிலை ஏற்பட்டது.

### பொத்துவில் தொகுதி

"தமிழர் ஒருவர் பொத்துவில் தொகுதியில் வெற்றிபெற வேண்டும் என்று கூட்டணி விரும்பியது. காசி ஆனந்தனை பொத்துவிலில் போட்டியிடுமாறு கூட்டணியினர் கேட்டனர் அவர் மறுத்துவிட்டார். பின் திரு. சி. இராசதுரையை பொத்துவிலில் போட்டியிடுமாறு கூட்டணியினர் கேட்டனர். அவரும் மறுத்துவிட்டார். காரைதீவில் உள்ள ஒரு பெரியவரையும் கேட்டனர். அவரும் மறுத்துவிட்டார்.

எல்லோரும் 'எம். கி.'யைப் போட்டால்தான் பொத்துவிலில் வெற்றிபெறலாம் எனக் கூறிவிட்டனர்.

'நான் அப்பொழுது ஐக்கிய தேசியக்கட்சிக்குப் பிரசாரம் செய்து கொண்டிருந்தேன். அந்தநேரம் கூட்டணியினர் என்னிடம் வந்து பொத்துவிலில் தமிழர் ஒருவர் வெற்றி பெற வேண்டுமென்று கேட்டதனால் நான் சம்மதித்தேன்.

'கிழக்கில் என் சொந்த ஊரான பானமைப்பற்று தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்கூட எனக்கு எதிராக வந்துபேச திரு. பிரேமதாச மறுத்துவிட்டார். அங்குவந்த யு. என். பி. தலைவர்கள்கூட யு. என். பி.க்கு வாக்களிக்கா

(6-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை வெற்றி!

டாக்கா, ஜன. 15

இங்கு நடைபெற்றஇலங்கை-பங்களாதேஷ் கிரிக்கெட் போட்டியில் இலங்கை இன்னிங்ஸால் வெற்றிபெற்றது.

இங்கு நடைபெற்ற மூன்று நாள் அதிகாரபூர்வமற்ற சர்வதேச கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் முதல் இன்னிங்சில் சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 174 ஓட்டங்களும் 2வது இன்னிங்சில் 164 ஓட்டங்களும் எடுத்திருந்தது. இலங்கை தனது முதல் இன்னிங்சில் 3 விக்கட் நஷ்டத்துக்கு மொத்தம் 347 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

## விறுவிறுப்புடன் முடிவடைந்த யாழ். லயன் உதைபந்தாட்ட விழா

(யாழ்ப்பாணம்)

உதைபந்தாட்ட ரசிகர்களின் நீண்டகாலத் தாகத்தைத் தீர்த்துவைத்து விளையாட்டுப்பிரியர்களுக்குப் பெருவிருந்தாக அமைந்த யாழ். லயன்ஸ் கழக உதைபந்தாட்டப்போட்டிகள், விறுவிறுப்புடன் நடைபெற்று நேற்றுடன் முடிவடைந்தது.

12-ம் திகதி ஆரம்பமான இந்த உதைபந்தாட்டவிழா, 4 தினங்கள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெற்றது. இவ்விழாவின் இறுதி நாளான நேற்று நடைபெற்ற முதலாவது போட்டியில் கொழும்பு சவுண்டேஸ் கோஷ்டியை சென் அன்ரனிஸ் கோஷ்டி 2—0 என்ற கோல்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டிக்கு கே யதுகுலசிங்கம் மத்தியஸ்தம்வகித்தார்.

இரண்டாவது இடம்பெற்ற போட்டியில் அகிலஇலங்கை பொலிஸ் கோஷ்டியை கொழும்பு ரட்ணம் கோஷ்டி 4-3 பனல்றி கோல்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டி ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை வெகு கவர்ச்சியாகவும் விறுவிறுப்பாகவுமமைந்தபோதும் இரு அணியிலும் சரிசமனாக விளையாடினர் இதனால் நேர முறைப்படி இரு அணியினராலும் எக்கோல்களையும் பெற முடியவில்லை. இதன் பின்னர் பனல்றி முறையின் பிரகாரம் 4-3 கோல்கள் வித்தியாசத்தில் கொழும்பு ரட்ணம்ஸ்கோஷ்டி வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு இ. கே குமரையா மத்தியஸ்தம் வகித்தார்.

யாழ்ப்பாணம் ரோறு ஸ்தாபனத்தாரின் ஆதரவில் நேற்று இடம்பெற்ற இவ் உதைபந்தாட்டவிழாவிற்கு யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி ஜனாப் அப்துல் காதர் பிரதமஅதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தார். (கா)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காரைநகர் 1. இராசையா செல்லத்துரையும்
2. பெண் வாலாம்பிகையும்

இல. ஈடு/15030

வழக்காளிகள்

எதிராக

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கு
அரசடி ரோட்டு 119, கணபதி சின்னப்பு

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் ஈடு/15030ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப் படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1978ஆம் ஆண்டு ஜனவரி (தை) மாதம் 30ஆம் திகதி (30-1-78) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 5350/-ம், இதில் ரூபாய் 4500/-க்கு 16-9-75 திகதி தொடக்கம் 27-8-76 திகதி வரைக்கும் 100க்கு 14 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 9 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 494-80 சதமும்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கிறை "நீர்நொச்சியடியும், கட்டைக்காடும்" நிலப் பரப்பு 21. இதில் நிந்தமாக நிலப்பரப்பு 3ம் குளி 1¼ம். அளவுகாரன் J. D. வீரசிங்கம் அளந்து விபரித்த 2355ஆம் இலக்கப் படத்திற் சுட்டப்படும் 1ஆம் துண்டு. இந்தப் பரப்பு மூன்று குளி ஒன்றேகாலும், செய்பயிர், வான்பயிர் களும், 4ஆம் 5ஆம் துண்டுகளுக்குள்ளிருக்கும் கிணற்றுத் தூர்வையில் பங்கும் துலா, ஆடுகால் பாவிப்புரித்தும், ஒழுங்கையில் பங்கும், வழிவாய்க்கால் உரித்தும், எல்லை கிழக்கு கந்தசாமி பெண் செல்லம்மாவின் ஆதனம், வடக்கு இளையவன் பழனியின் ஆதனமும் ரோட்டும், மேற்கு பிச்சு ஐயரின் ஆதனம், தெற்கு ஒழுங்கையின் முன்பகுதியும் மிகுதிக் காணியும் இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்

தெல்லிப்பழை
2-12-1977 8174

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ் மாவட்ட நீதிமன்றம்

வழ: இல. M B/14835
1. இராசையா செல்லத்துரையும் பெண்
2. வாலாம்பிகை, காரைநகர்.

வாதி

எதிராக

1. சண்முகம் தணிகாசலமும் பெண்
சாந்தநாயகி. திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

பிரதிவாதி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B/14835-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப் படி பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக்காணிகளையும் 1978-ம் ஆண்டு மாசி மாதம் 6-ந் திகதி (6-2-78) திங்கட்கிழமை காலை 10-30 மணிக்கு பிரசித்த ஏலவிற்பனையை நடத்த நியமித்துள்ளேன்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த பிரதிவாதி குறித்த வாதிக்கு ரூபா 21,860/-வும் மேலும் 17,000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 14% வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1975-ம் ஆண்டு வைகாசி மாதம் 2-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1975-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 16-ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 661-89 சதம் கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற்பற்று திருநெல்வேலி இறை "அரம்பனேடை" நில பர 25 குளி 1½ இதில் கிழக்குப் பக்கமாக நில பர 13-ம் வான்பயிர் செய்பயிர்களும் மற்றும் மிதைச் சேர்ந்தவைகளும் இந்தப் பரப்பு பதின்மூன்றுக்கும் எல்லை கிழக்கு சின்னத்தம்பி பெண் அன்னபூரணத்தினுதனம், வடக்கு அன்னப்பிள்ளையின் உரிமைக் காரனினுதனம். மேற்கு சின்னப்புவுக்கும் பெண் பறுவதத்திற்குமுரிய ஆதனமும் இராமலிங்கம் கைம்பெண் செல்லம்மாவினுதனமும் தெற்கு ரோட்டு இதடங்கலும் மேற்குப் பக்கக் கிணற்றிலும் தூர்வையிலும் இதற்குரிய பங்கும்.

2. மேற்படி இறை "வட்டுவத்தை" நில பர 4 குளி 7. இதில்வடக்குப்பக்கமாக நில பர 7 குளி 7. இதில் கிழக்குப்பக்கமாக நில பர 2 குளி 3½ம் போட்டிக்கோவில் அரைப்பங்கும் பயிர்வகைகளும் வடக்கு எல்லையிலுள்ள கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும் எல்லை கிழக்கு நன்னித்தம்பி தம்பையாவினுதனம் வடக்கு சாரள்ஸ் V. சின்னத்தம்பியினுதனம், மேற்கு அன்னப்பிள்ளை சின்னப்புவுக்கும் பெண் பறுபதத்திற்குமுரிய ஆதனம், தெற்கு கணபதிப்பிள்ளை பெண் கனகம்மாவினுதனம், மேற்கெல்லைக் காணிக்கும் தெற்கெல்லைக்காணிக்கும் மிகுதிக் காணியின் வடக்கு மேற்கு எல்லையோரம் பாதை பாவிப்பும் புறநீங்கலாக இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

சி. செ. பாலசிங்கம்,
கொமிஷனரும் மதிப்பாளரும்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை,
10-1-78. 8182

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## லட்சார்ச்சனை

[மாவிட்டபுரம்]

பிரசித்தி பெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ மகாமாரியம்பாளுக்கு லட்சார்ச்சனை நடைபெற்றுவருகிறது

கடந்த 10ம் திகதி ஆரம்பமான இந்த அர்ச்சனை தொடர்ந்து 33 தினங்கள் இடம்பெற்று பெப்ரவரி மாதம் 12ம் திகதி பூர்த்தியடையும். அன்று சங்காபிஷேக விழாவும், மணவாளக்கோல விழாவும் நடைபெறும். (இ)

## பிஸ்கால் விற்பனை

### மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம்

1. சின்னத்தம்பி இளையதம்பியும் பெண்
2. சரஸ்வதி, இருவரும் சுவாமி தோட்டம், நாவற்குளி, கைதடி.

வழக்காளிகள்.

வழக்கு இலக்கம்:
காசு சு. 4490.

விரோதமாக

1. கனகசபை மகேந்திர ராஜாவும் பெண்
2. நளினி, இருவரும் இலக்கம். 63, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். 1-ம் எதிரி தற்பொழுது தலைமைக்காரியாலயம், அரசினர் சினிமாப்படயாக்கம்,கொழும்பு. 2-ம் எதிரி 281/1, கொட்டா ரோட், கொழும்பு-8.

எதிராளிகள்.

மேற்சொல்லப்பட்ட எதிராளிகளிடமிருந்து வெலியாத்தில் விபரிக்கப்பட்ட தொகைப் பணம் ரூபா 2,400/- க்கு அதாவது ரூபா 1,200/-க்கு 24% வட்டிப்படி 21-8-1970 தொடக்கம் 12-5-1971 க்கு தீர்வை நாள் வரைக்கும் கடன் இறுக்கும் வரை 5% வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 786-17 சதமும், மேலும் குறித்த எதிராளிகள் மேற்குறித்த வழக்கு தீர்வை நாளாகிய 12-5-1971 தொடக்கம் 1-9-1974 வரையுமான பணத் தொகையும், பிஸ்கால் செலவும் பவுண்டேச்சும் அறவாக்குவதற்காக கீழே விபரிக்கப்படும் ஆதனத்தின் சகல உரித்துக்களையும் 1978-ம் ஆண்டு மாசி மாதம் 15-ந் திகதி புதன்கிழமை காலை 10-00 மணிக்கு சொல்லப்பட்ட ஆதனத்தில் இருந்து பகிரங்க ஏலத்தில் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிஸ்காலால் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று, சுண்டிக்குளி இறை "கல்விகாடு" நி. ப. 20, ஆட்சிப்படி, ஆனால் 31-3-67 ல் 517-ம் இலக்கத்தில் உலாந்தா சி. இ. குமாரசாமி அவர்களால் தயாரிக்கப்பட்ட படத்தில் நி. ப. 20 குளி 15. 62. இதில் அறுதிவிற்ற நி. ப. 6 நீக்கி மிகுதி நி ப. 14 குளி 15. 82. எல்லை கிழக்கு அரசாங்கத்திற்குரிய நிலம் (பகிரங்க வேலைத்தள பொறியியலாளர் குடியிருப்பு). வடக்கு டாக்டர் பிளாக்கின் ஆதனம், மேற்கு பழைய பூங்காவீதி. தெற்கு குறித்த 1, 2, 3 எனக் காட்டப்பட்ட துண்டுகள், பிலிப் பிரகாசராசாஜாவின் பிள்ளைகள் கிறின்சியாவுக்கும், சொகனுவிற்கும், மரியாம்பிள்ளை பிரான்சிஸ் கிறிப்பினுக்கும் பெண் திரேசாமலருக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலிற் சொரியலாய் 1/6 (ஆறில் ஒரு பாகம்)

மு. பத்மநாதன்
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண மாவட்ட
நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.
13-1-78. 8197

## மண்ணெண்ணை தட்டுப்பாடு

[உடுப்பிட்டி]

வடமராட்சிப்பகுதியில் மண்ணெண்ணைக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் கரவெட்டி, கரணவாய், நெல்லியடி, அல்வாய், புலோலிப்பகுதி விவசாயிகளும், பொதுமக்களும் மிகவும் கஷ்டமும், நஷ்டமும் அடைந்துவருகின்றனர்.

## வருமானவரி ஆணையாளர் பீலிக்ஸ்

(கொழும்பு)

திரு. ஜே. ஏ. ஆர். பீலிக்ஸ் வருமானவரி ஆணையாளராகப் பதவி ஏற்றுள்ளார்.

முன்னர் வருமானவரி ஆணையாளராக இருந்த திரு. சி. சிவப்பிரகாசம் நிதிஅமைச்சின் ஆலோசகராகப் பதவி ஏற்றதை அடுத்து திரு. பீலிக்ஸ் இப்பதவியை ஏற்றுள்ளார்.

கொழும்பு சென் பீட்டர்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான திரு. பீலிக்ஸ், கொழும்பு தமிழ்யூனியன் கிரிக்கெட் கோஷ்டியிலும் அங்கம் வகித்துள்ளார்.

53 வயதான இவர் ஒரு பௌதிகவியல் சிறப்புப் பட்டதாரியாவார். [இ]

## இலவச பாட நூல்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகரசபை, ஏழை மாணவர்களுக்கு பாடநூல்களை வழங்குவதற்கு 10,000 ரூபாவை ஒதுக்கியுள்ளது.

பாடநூல்களைப் பெறவிரும்பும் சகல ஏழை மாணவர்களும் தமது குடும்பநிலை குறித்து இம்மாதம் 20ம் திகதிக்குள் யாழ்.மாநகரசபைக்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவேண்டும் என்று ஆணையாளர் திரு கே. சிவஞானம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாடநூல்களை வழங்குவதற்குமுன் வட்டார ரீதியில் குடும்ப நிலைமை, திறமை ஆகியவற்றை பரிசீலனை செய்தபின்னரே நூல்கள் வழங்கப்படும். சகல வகுப்பு மாணவர்களும் இதற்கு விண்ணப்பிக்கமுடியும் எவருக்கும் எதுவித சலுகையும் அளிக்கப்படமாட்டாது என்றும் அவர் கூறினார். (கெ-இ)

## வரி விளம்பரம்

### தேவை

பொன் அம்பர், மீன் அம்பர் எதுவானாலும் கூடிய விலை கொடுத்து வாங்கிக்கொள்வோம். விபரங்களுக்கு:- கே. டி. எம். ஜுவலரீஸ், 67, கன்னாதிட்டி ரோட், யாழ்ப்பாணம். தொலைபேசி: 286, அன்ட் 7536. 8181

பழைய புத்தகங்கள், கொப்பிகள், சோதனைப் பேப்பர்கள் உடன் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய இடம் அண்ணா தொழிலகம், இணுவில். 8191

ஊதுபத்தி உருட்டுவதில் அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் உடன் தேவை. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 8195, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8195

### விற்பனைக்கு

டிராக்டர்டெயிலர் [பெட்டி] விற்பனைக்குண்டு. நா. சாம்பசிவம் அன் கோ., யாழ்ப்பாணம். 8198

### பயிற்சி

வெல்டிங் (Electric & Gas) இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor Technology) சிற்றி அன்ட் கில்ட்ஸ், PMG Certificate (General & Special) வெளிநாட்டு முறையில் பயிற்சிகள். கல்வி அமைச்சினால் தனியார்துறைதொழிற் பயிற்சிநிலையமென அத்தாட்சி பெற்ற ஸ்தாபனம். விசேட சனி, ஞாயிறு வகுப்புகளும் நடாத்தப்படுகின்றன. National Institutes 128, பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம். 8186

### கண்டெடுக்கப்பட்டது

உரும்பராய் காளிகோவிலடியில் (பலாலி வீதி) இனந்தெரியாத நபர்களால் தவறவிடப்பட்ட சூட்கேஸ்ஒன்று ரி. எஸ். கமலேஸ்வரனால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. மேற்படி விலாசத்தில் உரியவர் தகுந்த அத்தாட்சிகாட்டிப் பெற்றுக் கொள்ளலாம். 8207

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

கார்த்திகேசு கணேசு, அளவெட்டி.

வழக்காளி

இல. ஈடு/1515

எதிராக

1. கதிரவேல் நடராசா வரதராஜவும் பெண்
2. நீலாயதாட்சியும், 81, L பிளொக், ரொறிங்ரன் பிளாற்ஸ், கொழும்பு 5.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் M B/1515-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978-ம் ஆண்டு தை மாதம் 27-ந் திகதி (27-1-1978) முற்பகல் 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 6480/-ம் 8-11-1976 தொடக்கம் 20-5-1977 வரைக்கும் ரூபா 4000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 9 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 612/15.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் பெரும் பிரிவு வலிகாமம் வடக்குப்பகுதி மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை "தம்பாகலட்டி" நிலபரப்பு இரண்டும் (2) வான்பயிர் செய்பயிர்களும் இதன் தெற்கெல்லைக் காணியின் கிழக்கெல்லையருகாக வரும் நான்குமுழ அகலப்பாதைப் பாவிப்புரித்தும்இதன் தென்கிழக்குமூலைக்கிணற்றிலும் தூர்வையிலும் இதற்குரிய பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் எல்லை கிழக்கு முருகையா பெண் தேனம்பாளின் ஆதனம், வடக்கு குமாரசாமி பெண் கனகமுத்துவின் ஆதனம். மேற்கு சுப்பிரமணியம் பெண் சரஸ்வதியின் ஆதனம், தெற்கு செல்லத்துரை பெண் அன்னம்மாவின் ஆதனம். இவ்வெல்லைப்படி இது முழுவதும்.

க. சிவஸ்கந்தா,
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
மதிப்பாளரும்.

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை. 8200

ஈழநாடு
The Eelanaadu

## தனியார்துறை ஊழியர்

அரசாங்க ஊழியர்களைப்போலவே தனியார் துறைகளில் கடமைபுரியும் ஊழியர்களுக்கும் அவர்கள் சேவையிலிருந்து ஓய்வுபெற்றதும் மாதாந்தம் பென்ஷன் பெற வழிபிறக்குமென்றும் இத்திட்டம் இவ்வாண்டிலேயே அமுலுக்கு வருமென்றும் சமூகசேவைகள் அமைச்சின் செயலாளர் திரு. ரி. ஜி. குணசேகரா தெரிவித்துள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது.

தனியார்துறையில் லட்சக்கணக்கானவர்கள் கடமையாற்றுகிறார்கள்.

அவர்கள் சேவையிலிருந்து ஓய்வுபெறும்போது சேவைக்காலப்பணம் மட்டுமே வழங்குவதற்கு இப்போது வசதிசெய்யப்பட்டுள்ளது.

இப்பணம் ஒரேதொகையாக வழங்கப்படுவதால் ஓய்வுபெற்றபின் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கே அல்லல்படும் குடும்பங்கள் பல.

அரசாங்க ஊழியர் ஒருவர் சேவையிலிருந்து ஓய்வுபெற்றதும் அவருக்குப்பென்ஷன் கிடைக்கிறது. அவர் இறந்தபின்னர் அவரது மனைவிக்கு அந்தப் பென்ஷன் கிடைக்க வசதியிருக்கிறது.

இதனால் ஒருவர் இளைஞனாக இருக்கும்போது திருமணப்பேச்சு எழுந்ததும் 'மாப்பிள்ளை கவர்மென்ட் சேவன்டா?' என்று கேட்கும் வழக்கம் இன்றும் உண்டு. இதை வைத்துத்தான் தமிழ்ப்பகுதிகளில் இப்போதும் 'கோழி மேய்த்தாலும் கோரணமெந்திலே மேய்க்க வேணும்' என்று ஒரு பழமொழி வழங்கப்படுகிறது.

தனியார்துறையினர் சமூகத்தில் மட்டமாகக் கணிக்கப்படுவதற்கும் இதுவே காரணமாகும்.

தனியார்துறை ஊழியருக்கும் பென்ஷன் வழங்கும் திட்டம் கொண்டுவரப்பட்டால் இந்தநிலை மாறிவிடும்.

இந்தப் பென்ஷன் திட்டப்படி தனியார்துறை நிறுவனம் ஒவ்வொன்றும் அங்கு கடமையாற்றும் ஊழியர் சார்பில் குறிப்பிட்ட ஒரு தொகையைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்த வேண்டுமென்றும் இந்த நிதி ஊழியர் ஓய்வுபெற்றபின் மாதாந்தம் குறிப்பிட்ட தொகையாக வழங்கப்படுமென்றும் இந்த நிதிக்கு ஊழியரிடமிருந்து பணம் அறவிடப்படமாட்டாதென்றும் கூறப்படுகிறது.

தனியார்துறை ஊழியருக்குப் பென்ஷன் கிடைக்க வழிசெய்யப்படுமானால் அரசாங்க சேவைக்காக இப்போதுள்ள போட்டியும் குறைந்துவிடும்.

இந்தப் பென்ஷன் திட்டத்தை அரசாங்கம் விரைவில் செயல்படுத்துமானால் பல லட்சக்கணக்கான மக்களின் ஆசியையும் ஆதரவையும் அரசு சம்பாதித்துக் கொள்ளுமென்பதில் சந்தேகமில்லை.

## லட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் இலட்சார்ச்சனை நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. 14-ம் திகதி தைப்பூசத் தேர்த்திருவிழாவுடன் பூர்த்தியாகும்.

'சொக்க'னின்

# ஈழத்தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி

நாடகாசிரியர், கவிஞர், புனைகதைஞர், சமயதத்துவ விரிவுரையாளர், ஆகிய பல கோணங்களில் நமக்குக் காட்சி தந்த சொக்கன் ஓர் இலக்கிய ஆய்வறிஞராகப் பரிணமம் பெற்றுள்ளார். இவர் தமது முதுகலைப்பட்டத்திற்காக மேற்கொண்டிருந்த ஆராய்ச்சியின் பயனை எழுதி முடிந்த ''ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி'' என்ற ஆய்வுக் கட்டுரை இப்பொழுது ''முத்தமிழ் வெளியீட்டுக் கழக''த்தின் வெளியீடாக நூல்வடிவம் பெற்றுள்ளது.

ஆராய்ச்சி நூல்களை வெளியிடுவது இன்றைய நிலையில் மிகவும் அவசியமான தொரு பணியாகும். எமது பண்பாட்டையும் வரலாற்றையும் பற்றிய ஆய்வுகள் ஒருசில அறிவு சார்ந்தோர்மட்டத்தில் உணரப்படுவதோடு அமையாமல் பொதுமக்கள் மத்தியிலும் பரவுவதற்கு இத்தகைய வெளியீட்டு முயற்சிகள் இன்றியமையாதன.

சொக்கன் அவர்களுடைய இந்த நூல் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களுடைய அணிந்துரையுடன் அமைந்துள்ளது. பேராசிரியர் அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியமைக்கு இருவகைப் பொருத்தப்பாடுகள் உள. ஈழத்துத் தமிழ்நாடகத் துறையில் சிறப்பாக நாட்டுக்கூத்துத் துறையில் புரட்சிகரமான மாற்றங்களைப் புகுத்திய பெருமை பேராசிரியருடையதே. மேலும் சொக்கன் அவர்கள் இந்தத்துறையிலே இத்தகைய ஓர் ஆராய்ச்சியை மேற்கொள்ளுவதற்கு ஆலோசனைகள் கூறி, ஆய்வு நெறிகளை உணர்த்தி ஆற்றுப்படுத்தியவரும் பேராசிரியர் அவர்களே. இவ்வகையில் தமிழ்த்துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. தில்லைநாதன் அவர்களும் சொக்கனின் ஆய்வு முயற்சிக்குப் பெருந்துணை புரிந்துள்ளார். எனவே நாடக ஆசிரியர் ஒருவர் நாடகத் துறையில் பெரும்பணியாற்றிய பேராசிரியரதும் ஆய்வறிஞரதும் ஆற்றுப்படுத்தலின் கீழ் மேற்கொண்ட நாடக இலக்கிய ஆராய்ச்சி என்ற வகையிலும் இந்நூல் குறிப்பிடத்தக்க ஒரு முக்கியத்துவத்தினை வகிக்கின்றது.

### நா. சுப்பிரமணியம் எம். ஏ.

(யாழ்வளாகம்)

இந்த ஆய்வுநூல் ஆறுஇயல்களைக் கொண்டது. தமிழில் நாடகத் தமிழின் தோற்றம் தொடக்கம் ஈழத்தில் 1977-ம் ஆண்டின் இறுதிவரை மேடையேறிய நாடகங்கள் வரை உள்ள பகுதியைத் தனது ஆய்வுக்குரிய காலப்பகுதியாகக் கொண்டுள்ளது.

முதலாவது இயலிலே தமிழ் இலக்கிய வரலாற்றுப் பின்னணியில் தமிழ்நாடக இலக்கிய வளர்ச்சி வரலாற்றுக் கண்ணோட்டத்தில் அணுகப்படுகின்றது. தமிழில் முத்தமிழ் என்ற பாகுபாடு தொடங்கியதுமுதல் ஐரோப்பியகாலப் பகுதியில் மேல்நாட்டுப் பண்பாட்டுத் தாக்கம் ஏற்பட்டதுவரை உள்ள தமிழ்நாடகத்தின் சுருக்க வரலாறாக இப்பகுதி அமைகின்றது.

இரண்டாம் இயலிலே ஈழத்துத் தமிழ்நாட்டுக் கூத்துக்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இந்நாட்டுக்கூத்துக்களின் தெளிவான வரலாறு 18ம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் இருந்து ஆரம்பிக்கின்றதெனப்படுகின்றது. தமிழ்நாட்டுக் கூத்துக்கள், சிங்கள ''நாடசம'' என்னும் நாட்டுக்கூத்து மரபுக்கு முன்னோடியாக அமைந்துள்ளமையையும் இதனால் தேசியத்தன்மை வாய்ந்த கலைவடிவமாக அமைத்துள்ளமையையும் காணமுடிகின்றது. நாட்டுக்கூத்துக்களில் கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்தன, சைவசமயத்தைச் சேர்ந்தன என்ற இரு பிரிவுகள் உள. இவற்றுள் இரண்டினதும் பொருள் மரபை வேறுபடுத்திக் காட்டியுள்ளார்.

அடுத்து அமைந்துள்ள நான்கு இயல்களும் காலகட்டப் பிரிவுகளாய் உள்ளன. இவற்றின் முதலாவது காலகட்டம் ''சமயதத்துவ அறப் போதனைக் காலம்'' என்ற தலைப்பில் 1917—1938க்கு இடைப்பட்ட காலப்பகுதியாகும். ஈழத்தின் நவீன தமிழ் இலக்கிய வரலாற்றினை அமைக்கும் முயற்சியை மேற்கொள்ளும் பொழுது தெளிவாக்கப்பட வேண்டிய முக்கியமான காலகட்டமாக இது உள்ளது. ஆங்கில ஆட்சியின் பெறுபேறாக ஏற்பட்ட மேனாட்டுப் பண்பாட்டுத் தாக்கத்தினின்று ஈழம் தன்னை விடுவித்துக்கொள்வதற்கு உணர்வு பெறத்தொடங்கிய காலப்பகுதி இது. இக்காலப்பகுதியில் நவீன இலக்கியத்துறையில் சமூகசீர்திருத்த நோக்கம் முதன்மைபெற்றிருந்தது. இச்சீர்திருத்தத்திற்குச் சமய உணர்வு அடிப்படையாக அமைந்தது. தமிழ்நாடகத்துறையில் இக்காலப்பகுதியில் எழுந்த நாடகங்களில் இப்பண்புஇடம் பெற்றுள்ளமையைச் ''சொக்கன்'' சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளார். இக்காலகட்டத்தில் தென்இந்தியாவில் இருந்து ஈழத்திற்கு வருகை தந்த ''பம்மல் சம்மந்த முதலியாடைய'' ''சுகுணவிலாசசபை'' ஏற்படுத்திய தாக்கத்தையும் தகுந்த ஆதாரம் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார். சுகுணவிலாசசபையினரைப் போலத் தாங்களும் ஒருசபை அமைக்க வேண்டுமென்ற உணர்வு கலையரசு க. சொர்ணலிங்கம் போன்றவர்களுக்கு ஏற்பட்டது. இதுவே ஈழத்தில் தமிழ் நாடக சபைகள் தோன்றுவதற்கான சூழ்நிலை ஆயிற்று.

இவ்வியலிலே 1917-1938 காலப் பகுதி நாடகங்களின் பொதுப் பண்பும், அவையேற்படுத்திய சமயத் தாக்கமும், அவற்றில் அமைந்துள்ள இலக்கியப் பண்பும் ஆராயப்படுகின்றன.

சமூக விழிப்புணர்ச்சிக் காலம் என்ற வகையில் 1938-1958 காலப் பகுதி நாடகங்கள் தனி இயலாக ஆராயப்படுகின்றன. இக்காலப் பகுதியின் ஈழத்தின் சமூக அரசியற் சூழ்நிலை, ஒரு நிலைமாறு காவத்தைக் காட்டுவது. பழமைக்கும் புதுமைக்குமிடையில் ஒரு 'வைக்றை'யாக அமைந்த காலமிது. இக்காலப் பகுதியில் தமிழ் நாடகத் துறைக்கு முக்கிய பங்காற்றியவர்களுள் காலஞ்சென்ற பேராசிரியர் கலாநிதி க. கணபதிப்பிள்ளை அவர்களின் பணி மகத்தானது நாடக இலக்கியத்தை, அதனுடைய சமூகப் பயன்பாட்டிற்கேற்ப மக்களது மொழி நடைக்கு இட்டுவந்த பெருமை அவருடையது சமகால சமூக ஊழல்களையும், வரலாற்றுப் பெருமைகளையும் தமது நாடகங்களுக்குப் பொருளாகக் கொண்ட இவர், தமது வடமொழிப் புலமையைப் புலப்படுத்தும் வகையிலும், மாணிக்கமாலை என்ற நாடக' நூலை யாத்தவர். பேராசிரியருடைய பணியைப் பற்றிச் சொக்கன் அவர்கள் தரமானதொரு மதிப்பீட்டைக் கொடுத்துள்ளார். இவரது நாடகங்கள் எல்லாம் விரிவாக இங்கு ஆராயப்பட்டுள்ளன.

1958-1973 இடைப்பட்ட காலப் பகுதி, அரசியல் எழுச்சிக் காலம் என்னும் தலைப்பில் அமைந்துள்ளது.

இக்காலப் பகுதியில் எழுந்துள்ள நாடகங்களை வகைப்படுத்தி ஆராய்ந்துள்ள சொக்கன் அவர்கள் இக்காலப் பகுதிக்குரிய 'தனித்தன்மை வாய்ந்த' நாடகாசிரியராக 'மஹாகவி' அமைந்துள்ளார் என்கிறார். காலஞ்சென்ற மஹாகவி அவர்கள் ஈழத்துக் கவிதைத் துறைக்கும், கவிதை நாடகத்துறைக்கும் ஆற்றியுள்ள பங்களிப்பு இன்னும் விரிவான முறையில் ஆராய்ந்து வெளிப்படுத்தப்படவில்லை. இந்நிலையில் சொக்கனின் இந்தக் கருத்து மஹாகவி பற்றிய ஆய்விற்குத் தூண்டுகோலாக அமையுமென எதிர்பார்க்கலாம்.

இறுதியான ஆருவது இயல் ஈழத்தமிழ் நாடகத்துறையில் நிகழ்ந்துள்ள பரிசோதனை முயற்சிகள்பற்றியது குறிப்பாக அமைகின்றது. ஆய்வுக் கட்டுரையை எழுதி முடித்த பின்னர் கிடைத்த தகவல்களையும் இப்பகுதியில் இணைத்துள்ளார்.

ஓர் ஆராய்ச்சி நூல் என்ற வகையில் சொக்கனின் தகவல் தேட்ட முயற்சிகளும் அமைப்பு முறையும் பாராட்டத்தக்கன. ஆராய்ச்சி நூலைச் சாதாரண வாசக ரசனைக்கு ஏற்ப வெளியிடுவது சிரமம். எனினும் வாசிப்பவர்களைக் கவரத்தக்கவகையில் எழுதுவதில் அவரது எழுத்தாற்றல் பெருந்துணை புரிந்துள்ளதெனலாம். நூலைத் தொகுத்து நோக்கும்போது ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சி பாராட்டத்தக்க தொன்றாக அமையவில்லை என்று தெரிகின்றது. இது ஆய்வாளரின் குறைபாடல்ல; ஈழத்துப் படைப்பிலக்கிய வளர்ச்சியிலுள்ள குறைபாடு. ஆசிரியர் இயன்றவரையில் தக்கதொரு வரலாற்றமைப்பைத் தர முயன்றுள்ளார். இந்த ஆய்வு நூலில் சமூக வரலாற்றுப் பின்னணி விளக்கமான முறையில் அமையவில்லை என்று சிலர் கருதுவதற்கு இடமுண்டு. அதற்குக் காரணம் ஈழத்துத் தமிழரின் சமூக-பண்பாட்டு வரலாறு இன்னும் விரிவான முறையில் ஆராய்ந்து நிறுவப்படாமையேயாகும். ஈழத் தமிழிலக்கிய ஆய்வு இன்றுள்ள சூழ்நிலையில் சொக்கனது முயற்சி விதந்து பாராட்டுதற்குரியது. ஈழத்தின் நவீன தமிழிலக்கிய வரலாற்றை ஆராய முயல்பவர்களுக்கும் ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கும் 'சொக்க'னின் இந்த ஆய்வு நூல் ஊக்கமளிப்பதாகவும் துணைபுரிவதாகவும் அமையும் என்பது எனது திடமான நம்பிக்கை.

ஆசிரியருக்குக் கடிதம்

## கல்லூரியில் நடந்த கைகலப்பு இதுதான்!

''ஈழநாடு'' 12-1-78 இதழில் வெளிவந்த 'அதிபர் இடமாற்றம் கல்லூரியில் கைகலப்பு' என்ற செய்தி குறித்து பண்ணாகத்தைச் சேர்ந்த ஆசிரியர் திரு. சி. தியாகராஜா என்பவர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

எனது மகளை 1 ம் வகுப்பில் சேர்ப்பதற்காகவே அங்கு சென்றேன். 9-1-78 காலை 7-45 மணிக்கு எனது மகளை மற்ற மகளுடன் பாடசாலைக்கு அனுப்பிவிட்டு நான் 8 மணியளவில் பிள்ளையின் பிறப்புப் பத்திரத்துடன் பாடசாலைக்குச் சென்றேன். பாடசாலை மைதானத்திற்குள் பிரவேசிக்கும்போது அங்கு பொறுப்பேற்கச் சென்ற புதிய அதிபர் என்னைச் சந்தித்தார். 'வட்டாரக்கல்வி அதிகாரி எங்கே?' என்று கேட்டார். 'பொறுங்கள் மகளைச் சேர்த்துவிட்டு வருகிறேன்' என்று சொல்லிக்கொண்டு நிற்காமல் சென்றேன். புதிய அதிபர் என் பின்னால் உள்ளே வந்தது எனக்குத் தெரியாது. பழைய அதிபர் மைதானத்தில் நின்றுகொண்டிருந்தார். அப்போது 'மகளைச் சேர்க்கவேண்டும்' என்றேன். பழைய அதிபர் 'என்னை மாற்றிவிட்ட உனக்கு என்ன அட்மிஷன்' என்றார். எனக்கு ஆத்திரம்வந்தது. உடன் எனது சைக்கிளை நிலத்தில் சரித்துவிட்டு ''இதுதானா சங்கானையில் உள்ளவர்களுக்கு நான்தான் மாற்றியது என்று கூறினீர்'' என்று நான் கேட்டேன். அப்போது வாக்குவாதம் ஏற்பட்டது.

முதலில் பழைய அதிபர் கை ஓங்கினார். அந்த அடி என்மேல் படாமல் நான் தடைசெய்தேன். பின் நானும் அடித்தேன். இந்த நிகழ்ச்சி இரு நிமிடத்திற்குள் முடிவடைந்துவிட்டது. இதற்குள் புதிய அதிபர் எங்களை விலக்குப் பிடித்துவிட்டார். பின்பு பழைய அதிபர் தனது அலுவலகத்திற்குச் சென்று ஒரு முறிந்த கதிரைக்காலை கையில் எடுத்து ''இனி அருகில் வாடா பார்ப்போம்'' என்று தனது அலுவலக வாசலில் நின்று உரக்கக் கத்தினார். நான் நீர் நில்லும் என்று சொல்லிவிட்டுப் புதிய அதிபரைச் சாட்சிக்குவரும்படி கேட்டேன் அவரும் என்னுடன் பொலிஸ் நிலையத்திற்கு வந்தார். எனது முறைப்பாட்டைக் கொடுத்தேன். புதிய அதிபரும் எனக்குச் சாட்சியாக நின்றார்

இவைதான் உண்மையாக நடந்தவை. நான் லிகிதர் அல்ல; நான் ஓர் ஆசிரியர்.

### மணிவாக்கு

எல்லோருக்கும் திருப்தி கொடுப்பதற்கென நடந்து கொள்பவன் ஒருவருக்கும் திருப்தி கொடான்.

- காந்திமகான்

## மாணவர்களுக்கு இது ஒரு பிரச்னை

(பூநகரி)

பூநகரி மாகவித்தியாலய பாடசாலையில் குடிதண்ணீர் வசதியின்மையால் மாணவர்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்

பாடசாலை முடிந்ததும் அவசரம் அவசரமாக ஓடிச் சென்று பூநகரி வாடியடியிலுள்ள தேநீர்க்கடைகளுக்குள் நுழைந்து தமது தாகத்தை தீர்த்துக்கொள்ளும் மாணவர்களைப்பார்த்து பெற்றோர் வேதனைப்படுகின்றனர் மாணவர்களுக்கு குடிதண்ணீர் பாடசாலை அதிபர் உடன் ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

# இந்திரா கொலை முயற்சி: கமிஷன்விசாரணைவேண்டும்

## ஆட்சிமன்ற உறுப்பினர் குழு கோரிக்கை

புதுடில்லி, ஜன. 15

"கடந்த வெள்ளியன்று இரவு பழைய டில்லியில் முன்னுள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைக் கொலைசெய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி குறித்துக் கமிஷன் ஒன்றை நியமித்து விசாரணை செய்யவேண்டும்."

இவ்வாறு ஆறு ஆட்சிமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

திருமதி காந்தி, கடந்த வெள்ளியன்று பழைய டில்லியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொள்வதற்குச் சென்றுகொண்டிருந்த வேளையில், ஒருவர் கைத்துப்பாக்கியால் சுடுவதற்குத் திருமதி காந்தியை குறிபார்த்த போது பொதுமக்களாலும், பொலிஸாராலும் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

55 வயதான முராரி லால் பத்ரா என்ற அந்த நபரைத் துப்பாக்கியுடன் கைதுசெய்து பொலிஸ்நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.

இதையடுத்து, அரசுக்கு எதிரான சுலோகங்களைக் கோஷித்த வண்ணம் ஆயிரக்கணக்கான இந்திரா ஆதரவாளர்கள் பொலிஸ்நிலையத்தை நோக்கிச் சென்றபின்னர், கலைந்துசென்றனர் என்று அறிவிக்கப்பட்டது. [இ]

......

### பம்பாயில் உலக வர்த்தக நிலையம்

பம்பாய், ஜன. 15

பம்பாயில் உலக வர்த்தக நிலையம் ஒன்றை இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் நேற்று திறந்துவைத்தார்.

உலக வர்த்தக நிலையத்தின் முதல் கட்டமாகவே இது அமைக்கப்பட்டது. (இ)

## முழங்காவிலில் குழாய் கிணறு: ஜன. 21-ல் ஆலோசனைக் கூட்டம்

(வண்ணைப்பண்ணை)

கிளிநொச்சித் தொகுதியில் உள்ள முழங்காவில் பகுதி குளாய்க்கிணற்றுத் திட்டத்தின்கீழ் காணி பெறுவதற்கு தெரிவுசெய்யப்பட்டு இதற்காகப் பணம் செலுத்திய 291 இளைஞர்களும், இக்காணி சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்றுக்கு வருமாறு யாழ் மாவட்ட அரசாங்க அதிபரினுல் அழைப்புவிடப்பட்டுள்ளது.

இம்மாதம் 21-ம் திகதி முழங்காவிலில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எல். விஜயபால தலைமை தாங்குவார்.

கடந்த வருடம் முழங்காவில் பகுதியில் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் இக்குளாய்க்கிணற்றுத் திட்டம் காணி ஆணையாளரால் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்திற்கென தெரிவுசெய்யப்பட்ட 1 படித்த வாலிபர்களில் 29 பேர் இக்காணிகளில் வேலை தொடங்குவதற்கான பங்குப் பணத்தைச் செலுத்தியுள்ளனராயினும், தவிர்க்கமுடியாத காரணங்களால் குளாய்க் கிணறுகள் வெட்டத்தாமதமேற்பட்டதாலும் காணிகள் அளவையாளரால் முற்றாக இறுதியளவு செய்யப்படாததாலும் பணம் கட்டிய இளைஞர்களுக்கு உரிய காணிகளைக் கொடுத்து வேலைகளைத் தொடங்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக இதுசம்பந்தமான அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவற்றை விளக்குமுகமாகவும் இக்காணிகளில் வேலைகள் தொடங்குவது சம்பந்தமாகவும் மேற்படி கூட்டம் கூட்டப்படுகிறது.

இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மாவட்டக்காணி உத்தியோகத்தர் திரு. ஏ. எம். குலநாயகம் செய்துள்ளார்.

# இந்தியாவில்,நெருக்கடிநிலை

## ஒருபோதும் அமுலுக்கு வராது

— மொரார்ஜி தேசாய்

பம்பாய், ஜன. 15

இந்தியாவில் இனி ஒருபோதும் நெருக்கடி நிலை ஆமுல் செய்யப்படமாட்டாது என்று இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கூறினுர்.

பம்பாயில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே திரு. தேசாய் மேற்கண்டவாறு கூறினுர்.

நெருக்குதலுக்கும், கட்டாயத்துக்கும் அடிபணியும் அரசு நிச்சயம் ஓர் அரசாக இருக்க முடியாதென்றும் தெரிவித்த திரு. தேசாய், ஜனதா அரசு எவ்வித நெருக்குதலுக்கும் அடிபணியமாட்டாது என்றும் கூறினுர்.

நெருக்கடிநிலை அமுல்செய்யாவிடின் சிறந்த ஆட்சி நடத்த முடியாதென்ற மூடநம்பிக்கையை ஜனதா அரசு முறியடித்தே தீருமென்றும் அவர் கூறினுர். (இ)

# முல்லைத்தீவில் மீன்பிடியை அதிகரிக்க அரசு திட்டம்

## நேரில் பார்வையிட்ட அமைச்சர் உறுதி

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவுப் பகுதியில் மீன்பிடி உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசாங்கம் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமென்று இங்கு விஜயஞ்செய்த கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா உறுதியளித்தார்.

முல்லைத்தீவுப் பட்டினசபை முன்றலிலிருந்து மீன்பிடிக் கூட்டுத்தாபனக் கிளை அலுவலகத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட அமைச்சருக்குப் பொதுமக்கள் பல நூற்றுக் கணக்கில் திரண்டு நின்று வரவேற்பளித்தனர்.

கடற்றொழில் அமைச்சர் தொடர்ந்து பேசுகையில், "சிறு மீன்பிடியாளர்களுக்கு உதவிசெய்ய நான் முன்வந்துள்ளேன். இவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து, பெருந் தொகையில் மீன்களைப் பெற்றுக்கொள்வதே நோக்கம். உங்கள் மீன்களைக் கூட்டுத்தாபனம் நியாயமான விலையில் கொள்முதல் செய்யும். உங்கள் குறைகள் கவனிக்கப்பட்டுத் தீர்த்துவைக்கப்படும்" என்று தெரிவித்தார்.

அமைச்சின் இந்த உத்தியோகபூர்வமான விஜயத்தில் தமிழர் கூட்டணி எம். பி.கள் எவரும் கலந்துகொள்ளவில்லை. [ஆனை. நி.]

## உடுவில் இரட்டைக் கொலை; கொள்ளை:

# "இரத்தம் கக்கியபடி மாமா கட்டிலில் இறந்து கிடந்தார்!" மருமகன் சாட்சியம்

## "மாமி கழுத்து நெரிக்கப்பட்டு பிணமாக கிடந்தார்"

(மாவிட்டபுரம்)

"சம்பவம் பற்றிக் கேள்விப்பட்டதும் நான் உடனே ஓடிச் சென்று பார்த்தபோது எனது மாமா வாயில் இரத்தம் வந்தபடி இறந்துகிடந்தார். மாமி கை, கால்கள் கட்டியபடி கழுத்து நெரிக்கப்பட்டு இறந்து கிடந்தார்".

இவ்வாறு உடுவில் வடக்கு இரட்டைக்கொலைச் சம்பவம் தொடர்பாக நடந்த ஸ்தல விசாரணையில் சாட்சியமளித்த உடுவிலைச் சேர்ந்த பொன்னையா சண்முகநாதன் என்பவர் கூறினுர்.

உடுவில் வடக்கில் கடந்த வியாழன் இரவு இனந்தெரியாத கொள்ளைக்கோஷ்டியொன்று தனிமையிலிருந்த கந்தர் செல்லையா (71 வயது) செல்லையா அன்னம்மா (68 வயது) ஆகிய வயோதிபத் தம்பதியரைக் கொலை செய்துவிட்டு அங்கிருந்த பணம், நகையைக் கொள்ளையடித்துச் சென்றது தெரிந்ததே.

இது தொடர்பாக மல்லாகம் பதில் நீதிபதி திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஸ்தல விசாரணை நடத்தியசமயம் மேற்படி நபர் மட்டுமே சாட்சியாக ஆஜர்செய்யப்பட்டார்.

அவர் தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:

"காலமான வயோதிபத் தம்பதிகளுக்கு பிள்ளைகள் எதுவும் இல்லை. நான் அவர்களுக்கு மருமகன் முறையானவன். சின்னவயதுமுதல் என்னை அவர்கள் வளர்த்து வந்தனர். திருமணம் முடிந்ததும் நான் உடுவிலில் வேறு ஒரு வீட்டில் வசிக்கச் சென்றுவிட்டேன். இருந்தபோதும் இவர்களது வீட்டுக்கு அருகில் நான் தோட்டம் செய்வதால் தினமும் வந்து இவர்களைப் பார்த்துவிட்டுத்தான் செல்வேன். இரவு நேரத்தில் உதவியாக இவர்களது வீட்டிலேயே தங்கியும் விடுவேன். இவர்களது வீட்டில் நான் தினமும் இரவு நேரங்களில் தங்கிவந்தபோதும் சிறு சுகயீனம் காரணமாக கடந்த சனிக்கிழமையுடன் இங்கு தங்குவதை நிறுத்திக்கொண்டேன். ஆயினும் இடையிடையே அவர்களை வந்து பார்த்துவிட்டுப்போவேன்.

சம்பவதினமும் மாலை இவர்களது வீட்டுக்குச்சென்றேன். மாமா சுருட்டுக் குடித்துக் கொண்டிருந்தார். மாமியும் அருகிலிருந்தார். தமது நாய்க்கு வலி வந்ததாகச்சொன்னுர்கள். பின்னர் நான் வீடுதிரும்பிவிட்டேன்.

மறுநாள் அதிகாலை வரதராசா என்பவர் மூலம் தகவல் அறிந்து அவர்களது வீட்டுக்குச் சென்றேன், மாமா வாயினுல் இரத்தம் கக்கியபடி தாம் படுத்திருந்த கட்டிலிலேயே இறந்துகிடந்தார். மாமியின் கை, கால்கள் சீலையினுல் கட்டப்பட்டு கட்டில் காலுடன் அந்தச்சீலை கட்டப்பட்டிருந்தது. வாயினுல் இரத்தம் வந்திருந்தது. அவரும் இறந்து கிடந்தார்.

வீட்டில் இருந்த பெட்டிகள் யாவும் சிதறிக்கிடந்தன.

### அடைவு நகைகள்

அவர்கள் அடைவு பிடித்து ஏராளமான நகைகள் வைத்திருந்தனர். நானும் சில நகைகள் அடைவு வைத்திருந்தேன். அதைவிட மாமி ஒரு சோடி காப்பு, ஒரு மோதிரம் தாலிக்கொடி, தோடு அணிந்திருந்தார். சங்கிலி, பென்ரனும் கூடுதலாக வைத்திருந்தார். மாமாவும் மோதிரம் ஒன்றை அணிந்திருந்தார். பணம் சுமார் 3 ஆயிரம் ரூபாவரையில் அவர்களிடம் இருந்தது. இவை எல்லாம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. வீட்டில் எதுவுமே இல்லை.

வீட்டில் நின்றநாயும்இறந்து கிடந்தது. அதற்கு வலி வந்ததால் இறந்திருக்கலாம்."

தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. சுன்னுகம் பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர். (இ)

### ஜனுதிபதி மாளிகைக்கு புதிய பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)

ஜனுதிபதி மாளிகைக்கு அடுத்த மாதம் முதல் புதிய முறையில் அமைந்த பாதுகாப்பு வழங்கப்படும்.

பெப்ரவரி மாதம் 4-ம் திகதியிலிருந்து புதிய பாதுகாப்பு முறை அமுலுக்குவரும்.

இலங்கை இராணுவ 'மிலிட்டரி பொலிஸா'ரின் கீழ் ஒரு தனிப் பிரிவாக அமையப்போகவிருக்கும் இப் புதிய பாதுகாப்பு அமைப்புகளின் படி, ஜனுதிபதி மாளிகைப் பாதுகாவலர்களுக்குரிய சீருடைகள் வண்ணங்களில் அமைந்திருக்கும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள்

## ஜூலை மாதத்திலேயே நடைபெறும்?

(கொழும்பு)

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் முன்னர் எதிர்பார்க்கப்பட்டதுபோல இவ்வருட ஆரம்பத்தில் நடைபெற மாட்டா.

இவ்வருடம் ஜூன் மாதம் அல்லது அதற்குப் பின்னர் தான் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் நடைபெறும் என்று நம்பகமாகத் தெரிய வருகிறது.

உள்ளூராட்சிமன்றங்களுக்குக் கடந்த ஒன்பது ஆண்டுகளாகத் தேர்தல்கள் நடைபெறுமலிருக்கின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நடைபெறப்போகும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் அரசியல்கட்சிகள் மட்டுமே அங்கீகரிக்கப்படும். தேர்தலில் போட்டியிட கட்டுப்பணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை.

பயிற்சி வகுப்புகள்

### பரவலாக்க கோரிக்கை

(மாவிட்டபுரம்)

வலி. வடக்குப் பகுதிக்கான அரசினர் தையற்பயிற்சி நிலையம் மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்தும் ஒரே கிராமத்தில் இயங்குவது குறித்து ஏனைய கிராமத்தவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

வலி. வடக்குப் பகுதியில் உள்ள இளம்பெண்களுக்குத் தையல், சமையல் கலைகளில் பயிற்சியளிப்பதற்காக ஒரு கிராமத்தில் ஒரு வருடம் மட்டுமே இயங்க வேண்டிய இத்தையற்பயிற்சி நிலையம் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஊறணிக்கிராமத்தில் இயங்கிவந்து இந்த ஆண்டும் அங்கேயே இயங்கி வருகிறது.

வலி. வடக்குப் பகுதியைச் சேர்ந்த ஏனைய கிராம மக்கள் தங்கள் கிராமத்தில் இதை நிறுவுமாறு கோரிக்கை விடுத்தும் பயன் ஏற்படவில்லைஎன்று குறைபட்டுக் கொள்கிருர்கள்.

கீரிமலை, கூவில் வசந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் இத்தையற் பயிற்சி நிலையம் தமது கிராமத்தில் அமைக்கப்பட வேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல ஆண்டுகளாக வேண்டுகோள் விடுத்துவருவது குறிப்பிடத்தக்கது.

......

### சீரற்ற நீர் விநியோகம்

[கம்பளை]

நீர் விநியோகத்தால் பல பகுதிகளிலும் வாழும் கம்பளை மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சில பகுதிகளில் தேவைக்கதிகமாக குழாய்களில் நீர் திறந்துவிடப்படுகின்றபோதிலும்வேறுசிலபகுதிகளில்தேவையைப் பூர்த்தி செய்யவேண்டிய நீரின் அரைப்பகுதிகூட கிடைக்காது அல்லலுறுகின்றனர்.

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி: 2-30, 6-30, 9-30
ஏ.வி.எம்.ராஜன்
**தாய்க்கு ஒரு பிள்ளை**

**RIO** (Jaffna)
Daily 4 Shows
After Long Interval
**MISTRESS PAMELA**
(Adults only)

**நாகம்ஸ்**
[சுன்னாகம்]
தினசரி: 6-45, 10-00
சிவாஜி-சாவித்திரி
**சரஸ்வதி சபதம்**

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30
**அன்பைத்தேடி**

**Regal** (Jaffna) The star of born free In a new adventure
Daily at 4-45, 7-00 & 9-00 p. m.
**RING OF BRIGHT WATER**
(Color)

**ராஜா** [யாழ்ப்பாணம்] இன்று மட்டும் தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - விஜயா - விஜயகுமாரி
நடித்த
**த சா வ தா ர ம்**
இத்துடன் அமரர் தந்தை செல்வாவின் இறுதி யாத்திரைக் காட்சியும் காண்பிக்கப்படும்.

இப்பொழுது அரங்கு நிறைந்து காண்பிக்கப்படுகிறது.
**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
புரட்சி நடிகர் எம். ஜி. ஆரின்...
**அரசிளங்குமரி** (புத்தம்புதிய பிரதி)
கதைவசனம்: மு. கருணாநிதி

**ராணி** வி. பி. கணேஷன் — சுபாக்ஷினி
ராம்தாஸ் — ஜெனீட்டா
(யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள் நடித்த
**நான் உங்கள் தோழன்**
அமரர் செல்வநாயகத்தின் இறுதியாத்திரைக் காட்சியும் கதையுடன் - சேர்ப்பட்டுள்ளது

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-ஜெய்கணேஷ்!
**மூத்தான முத்தல்லவோ**

**லிடோ** எம். ஜி. ஆர் - லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ்.நகர்) போன்: 7693
**நீதிக்கு தலைவணங்கு**

கடைசி வாரம்
**மனோஹரா** (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி- ஜெமினி - லக்ஷ்மி - நிர்மலா
**உனக்காக நான்**
(ஈஸ்ட்மன் கலர்)
17-ந் திகதி **ஜக்கம்மா**

**ஸ்ரீதர்** தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
முத்துராமன், ஜெயசித்திரா, சுந்தரராஜன், ஸ்ரீகாந்த்
**இன்ஸ்பெக்டர் மனைவி**
டைரக்‌ஷன் A.C. திருலோகசந்தர் M. A.

**வின்ஸர்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா.
**மூன்று முடிச்சு**
திரை கதை வசனம், டைரக்‌ஷன்: கே. பாலசந்தர்

### மட்டக்களப்பு, மாத்தறை

# புதிய வளாகங்கள் ஜூனில் செயல்படும்

## பல்கலைக்கழக மசோதாகுறித்து மாணவர் கருத்தும் கோரப்படும்

(கொழும்பு)

உத்தேச பல்கலைக்கழக மசோதா சம்பந்தமாக கருத்துக்களைத் தெரிவிக்குமாறு பல்கலைக்கழக மாணவர்கள் கோரப்பட்டுள்ளனர்.

உத்தேச பல்கலைக்கழக மசோதா விரைவில் தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. இம் மசோதா பற்றிய அபிப்பிராயங்களைத் தெரிவிக்குமாறு இலங்கைப் பல்கலைக்கழகத்தின் சகல வளாகங்களையும் சேர்ந்த மாணவர்கள், பல்கலைக்கழக போதனாசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் பிரதிநிதிகள் கேட்கப்பட்டுள்ளனர். இது சம்பந்தமாக ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது

இம்மசோதாவுக்கான சட்ட நகல்களை, கல்வி அமைச்சைச் சேர்ந்த பேராசிரியர் ஸ்டான்லி கல்பகே தயாரித்து வருகின்றார். பல்கலைக்கழக மான்ய கமிஷன் பல்கலைக்கழகசேவைக் கமிஷன், வெளிவாரி பல்கலைக்கழக பட்டப்படிப்பு முறை ஆகியவற்றை புதிய மசோதா கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க; உத்தேச மட்டக்களப்பு, மாத்தறை வளாகங்கள் இவ்வருட ஜூன் மாதத்தில் இயங்கத் தொடங்கும் என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றன.

## முதலிடம்

(யாழ்ப்பாணம்)

புதுவருடத்தை முன்னிட்டு கிறீன் பீல்ட் வி. கழகம் நடாத்திய விநோத உடையலங்காரப் போட்டியில் யாழ். குருநகர் சென். ஜேக் சனசமூக நிலையம் பங்குகொண்டு முதலிடம் பெற்ற திரு. ஜே. ஏ. சேகர், கே. குணம் ஆகியோருக்கு முதலிடத்திற்கான பரிசை யாழ். ஆசனக்கோயில் பங்குத்தந்தை வண. பிதா எஸ். செல்வராஜா அடிகளார் வழங்கியதோடு பரிசில் பெற்ற வீரர்களையும் நிலையத்தையும் பாராட்டிப் பேசினார். (இ)

## சப்தமிடும் சங்கு

[மன்னார்]

மன்னார் பள்ளிமுனைக் கடற்கரையில் கடைக்காரர் ஒருவர் சங்கு ஒன்றைக் கண்டெடுத்துக் கடையில் கொண்டுவந்து வைத்துள்ளார். இச்சங்கு தினமும் இரைந்தவண்ணம் இருக்கிறது. கடைக்காரருக்கும் நன்றாக வியாபாரம் நடக்கிறதாகச் சொல்லப்படுகிறது. முன்பு ஒருமுறை முருங்கனில் சலவைத் தொழிலாளி ஒருவர் வீட்டில் இப்படியான இரையும் சங்கு இருக்கக் காணப்பட்டது. தேசிய லொத்தர்சபை சீட்டிழுப்பில் ஆறுதல் பரிசும் அத்தொழிலாளிக்கு கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

## புதிய அதிபர்கள்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறைப் பகுதியைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு புதிய அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபராக திரு. ஆர். அருளையாவும், பன்னாலை சேர். கனகசபை வித்தியாலய அதிபராக திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமியும், காங்கேசன்துறை மகாவித்தியாலய அதிபராக திரு. எஸ். வேலாயுதனும், ஏழாலை மகாவித்தியாலய அதிபராக திரு. எஸ் ஆர். சண்முகரத்தினமும், வீமன்காமம் மகாவித்தியாலய அதிபராக திருமதி பி. சச்சிதானந்தமும் மாதகல் சென். ஜோசெப் கல்லூரி அதிபராக திரு. எம். சிவராஜரத்தினமும் புதிய அதிபர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

# நாட்டுக்கூத்தை வளம்படுத்த இளைஞர்களுக்கு அழைப்பு

(அரியாலை)

''தமிழ்மக்களின் பாரம்பரியக் கலைகளில் ஒன்றாக இன்று விளங்கும் நாட்டுக்கூத்தை வளப்படுத்தி வளர்க்க இளைஞர்கள் முன்வரவேண்டும். நமது மூதாதையர்களால் இதுவரை பேணிக் காக்கப்பட்ட நாட்டுக்கூத்து இன்று தேடுவாரற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது கண்டு நாம் வருந்தாமலிருக்கமுடியாது. நாட்டுக்கூத்தின் முக்கிய அம்சமாக விளங்கும் ஆட்டமும், பாட்டும் மரபு தவறாத முறையில் அமையவேண்டும். இவை இரண்டையும் ஒருசேரவளர்க்க வேண்டிய பொறுப்பு அண்ணாவிமாருடையதாகும். நாட்டுக் கூத்து இன்று அழிந்து போகும் நிலையிலுள்ளது. இதனை அழிந்துபோகாமல் பாதுகாக்க அண்ணாவிமார் மட்டுமல்ல, இளம் கலைஞர்களும் முன்வரவேண்டும்.''

இவ்வாறு கோண்டாவில் நாட்டுக்கூத்து அண்ணாவிமாரும், கலைஞர்களும் கலந்துகொண்ட நாட்டுக் கூத்துக் கருத்தரங்கில் இலங்கை வானொலி நாட்டுக்கூத்து அமைப்பாளர் திரு. அ. தாசீசியஸ் பேசுகையில் குறிப்பிட்டார்.

நாட்டுக்கூத்து ஒத்திகைகளைப் பார்வையிட்ட திரு. தா. தாசீசியஸுக்கு அண்ணாவிமார்களான நா. செட்டியார், முத்தமிழ்ச் செல்வன் கலைமணி மு. இராமநாதன், அரியாலையூர் அண்ணாவியார் திரு. கி. சின்னையா ஆகியோர் நாட்டுக்கூத்தில் அமைந்துள்ள பலவகையான ஆட்டங்களையும் ஆடிக்காட்டினார்கள். அநேக கலைஞர்கள் இதில் கலந்துகொண்டனர்.

## சிபார்சுக்கு தெரிவுக்குழு

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத்தொகுதியில் தராதரப்பத்திமற்ற ஆசிரியர்களைத் சிபார்சு செய்வதற்கான ஒருதெரிவுக்குழு ஒன்றை வட்டுக்கோட்டைத் தொகுதி தேசியபேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு நியமித்துள்ளார்.

நாளை செவ்வாய்கிழமை இக்குழு சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில்கூடி தகுதியானவர்களைத் தெரிவு செய்யும் என்று அவர்தெரிவித்தார். (இ)

**KARATE**
சோட்டக்கான் கராட்டிக் கழகம்
பதிவு இல: 7

தென்கிழக்காசிய வீரரும், அகில இலங்கை கராட்டிச் சங்கப் பிரதம பயிற்சியாளருமான Mas. Bonnie Roberts Black Belt [San-Dan] அவர்கள் வாரந்தோறும் கராட்டி வகுப்புகளை நடத்தவிருக்கின்றார்.

புதிய வகுப்புகள் ஆரம்பம்: 21-01-78 பி. ப. 4-00
நேரம்: சனி 4-00 பி. ப. ஞாயிறு 9-00 மு. ப.
இடம்: திவ்ய ஜீவன சங்கம், நல்லூர்.

மேலதிக விபரங்களுக்கு:
உப பயிற்சியாளர் Mas. P. ராகவன் (BrownBelt) 1st Kyu
62, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். 8209

யா/ விக்ரோறியாக் கல்லூரி
சுழிபுரம்.
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும்
காங்கேசன்துறைத் தொகுதித்
தேசியப் பேரவை உறுப்பினரும்
இக்கல்லூரியின் புகழ் பெற்ற பழைய மாணவருமான
**திரு. அ. அமிர்தலிங்கம்**
அவர்களுக்கு
02-02-1978 அன்று கல்லூரி சார்பில்
ஒரு இராப்போசன விருந்து அளித்துக் கௌரவிக்க எண்ணியுள்ளோம்.

இவ்விருந்துபசாரத்தில் பங்குபற்ற விரும்பும் பழைய மாணவரும், பெற்றோரும் தயவுசெய்து 27-01-78க்கு முன் கல்லூரி அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

அதிபர்:

இராப்போசன விருந்துக்கான கட்டணம் ரூபா 20-00
தம்பதிகளுக்கு ரூபா 35-00

பொதுக் கூட்டம் பிற்பகல் 4·00 மணி.

தலைவர் திரு. தா. திருநாவுக்கரசு
8208 (தே. பே. உ. வட்டுக்கோட்டை.)

# கிராமசேவகர் பிரிவுகள் தோறும் கைத்தொழில்கள்

## வட்டு. எம். பி. நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

"வட்டுக்கோட்டைத் தொகுதியில், ஒவ்வொரு கிராமசேவகர்கள் பிரிவிலும் ஒவ்வொரு கிராமிய கைத்தொழில்களை நிறுவுவதற்கு சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கு 50 ஆயிரம்ரூபாமுதல் ஒரு லட்சம் ரூபா வரை மூலதனமிடப்படும்.

இத்தகவலை தமிழர்விடுதலைக் கூட்டணி காரியாலயத்தில் நடைபெற்ற தமிழர் பொருளாதார இயக்கத்தின் புனரமைப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய வட்டுக்கோட்டை எம்.பி. திரு.தி. திருநாவுக்கரசு தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் கலந்துகொண்டார். கூட்டத்தில் கொழும்பு, மட்டுநகர், திருமலை, வவனியா, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் இருந்து பல பிரமுகர்களும், அரசியல் முக்கியஸ்தர்களும், பெண்களும் கலந்துகொண்டனர். கூட்டம் மிகப்பரபரப்பான சூழ்நிலையில் நடைபெற்றபோதிலும் எதிர்க்கட்சித்தலைவர் சகல பிரச்னைகளுக்கும் சாதுரியமாகப் பதிலளித்தார்.

திரு. திருநாவுக்கரசு தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது!

மேற்படி திட்டம் இந்த ஆண்டு முடிவுக்குள் அமுல் செய்யப்படும். தொழிற்சாலைகளினால் வட்டுக்கோட்டைத் தொகுதியில்ஆயிரக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் வேலைவாய்ப்பு பெறுவர்.

தமிழர் பொருளாதாரஇயக்கம் அரசியல் கலப்புடன் ஒவ்வொருதொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர்களினதும் உதவியோடு நடைபெறவிருப்பது பாராட்டத்தக்கது.

"வட்டுக்கோட்டையில் நிறுவவுள்ள, கைத்தொழில் பேட்டைகளில் சகல மக்களும் பங்காளராகஇருப்பர். இதனால் அத் தொழில் பேட்டைகள் வளர்ச்சியடையும் வாய்ப்பு அதிகம் உண்டு.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமை வகித்துப்பேசுகையில் கூறியதாவது!

### கூட்டுமுயற்சியில் ஆர்வமில்லை

தமிழரின் எந்தவொரு இயக்கமும் கூட்டாக வெற்றிபெறுததற்குக் காரணம் அவர்கள் கூட்டுமுயற்சிகளுக்கு ஒத்துழைப்பது கிடையாது, தனி முயற்சியில் அவர்கள் பெருமளவில் ஆர்வம் காட்டுகின்றனர். "பங்குடமை என்பது பாழுடமை" என்பது அவர்கள் சித்தாந்தம். இந் நிலைமை மாற வேண்டும்.

தமிழ் தேசிய இனத்துக்கு கடந்த ஆண்டு இடம்பெற்ற இனவாத சம்பவங்களினால் ஏற்பட்ட துன்பங்களுக்குப் பின்னர் ஒவ்வொரு தமிழனும் தமிழ்ஈழ பொருளாதாரவத்ளதுக்கு உழைப்பதற்கு இப்படியான இயக்கங்களில் ஈடுபட வேண்டுமென்பதை உணர்ந்துள்ளான்என்பதை இப்போது காணக்கூடியதாக இருக்கிறது.

இயக்கத்தின்ஸ்தாபகர் திரு. ஏ. குமரகுரு பேசுகையில்:

தவிர்க்கமுடியாத காரணங்களினால் சில அரசியல்காரணங்களுக்காக நான் லண்டன் செல்லவேண்டியிருந்தது. எனினும் பொதுப்பணம் பாதுகாப்பான முறையில் வங்கியிலிடப் பட்டுள்ளது. தற்போது 12,000 ரூபாய் வங்கியில் உள்ளது என்றார்.

டாக்டர் திரு. ஏ. தர்மலிங்கம் பேசுகையில் வடபகுதியில், தமிழருக்கென 4 திட்டங்களை உருவாக்கினோம். அவற்றில் இரண்டு தோல்வி கண்டு விட்டன. யாழ்ப்பாண கூட்டுறவு லிமிட்டெட், வல்லை நெசவாலையும் ஓரளவு வெற்றியாக இயங்கி வருகின்றது. இந்த பொருளாதார இயக்கமும் தமிழருக்கென்றே உருவாக்கப்பட்டுள்ளது. அதையும் வெற்றியடையச் செய்வது தமது கடமை என்றார்.

புதிய நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது. [கெ-இ]

# 2ஆண்டில் கிடைக்காவிடில்--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடில் எம். சிக்கு வாக்களிக்குமாறு வீடுவீடாகப் பிரசாரம் செய்தனர்.

### 'எனது வெற்றி...'

பொத்துவிலில் 15,000தமிழ் வாக்காளர்கள் உள்ளனர். இவர்களில் 6000 தமிழ்வாக்காளர்கள் பிரிந்து வாக்களித்தனர். சுமார் 9000 வாக்காளர்களைக் கொண்டு நான் வெற்றிபெற்றிருக்க முடியாது. எனக்கு கணிசமான அளவு சிங்கள, முஸ்லிம் சகோதரர்களும் வாக்களித்தனர். கூட்டணியில் போட்டியிட்டதால் வெற்றிபெற்றேன் என்பது தவறாகும்.

நான் தமிழர் உரிமைக்குத் தடையாக இருக்கவில்லை. தலைவர் அமைச்சர் திரு. தேவநாயகமும் நானும் தமிழர் உரிமைகளைப்பெற ஒருவழியில் பாடுபடுகின்றோம். கூட்டணியினர் வேறுவழியில் பாடுபடுகின்றார்கள். எல்லோரும் உரிமை பெறத்தான் பாடுபடுகின்றோம்.

### வடக்கும் கிழக்கும்

யாழ்ப்பாணத்தில் பாணும் பட்டரும் சாப்பிட்டவர்கள் இன்று கேக் கேட்குறார்கள் இங்கு பொருளாதாரநிலை அபிவிருத்தியடைந்துள்ளது. ஆனால் கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில் கரும்பை குடித்துவிட்டு, கஞ்சிகேட்கும் நிலையில் மக்கள் வாழ்கின்றார்கள். மக்கள் அங்கு பொருளாதார அபிவிருத்தியடையவில்லை. இதனால்தான் கிழக்கை முன்னேற்ற அரசுக்கு ஒத்துழைப்பு கொடுத்து வருகிறோம். இதில் என்ன தவறு இருக்கிறது?

கிழக்கில் எல்லா விஷயங்களுக்கும் மக்கள் எம். பி.க்களிடம்தான் வருவார்கள். பிள்ளைக்குத் தொண்டைக்குள் முள் குற்றினாலும் எம். பி. யிடம்தான் வருவார்கள்.

### அகதிகளைக் காப்பாற்ற வேண்டும்

கலவரத்தினால் பாதிக்கப்பட்ட அகதிகள் பலர் கிழக்கு நோக்கி வந்துள்ளார்கள். அவர்களைக் காப்பாற்ற வேண்டியது நம் கடமை.

தனித்தமிழ்நாடு கிடைக்காது என்பது கூட்டணியினருக்கே தெரியும். அப்படியிருந்தும் பிரசாரம் செய்து வருகிறார்கள். இளைஞர்கள் இவர்கள் பேச்சில் இனியும் ஏமாறக் கூடாது.

தேர்தலின்போது என் தொகுதிக்கு திரு ஏ. அமிர்தலிங்கம் இருதடவை மட்டுமே வந்தார். வடக்கிலிருந்து வேறு கூட்டணித் தலைவர்கள் எவரும் வரவில்லை. நான் தனித்து நின்றுதான் வெற்றிபெற்றேன் அபிவிருத்தித் திட்டங்களை அரசிடம் சமர்ப்பித்துள்ளோம். அவை நிச்சயம் நிறைவேற்றப்படும் என்று கூறினார்.

திரு. எஸ். கே என். சிவராசா பேசுகையில், தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களின் ஒற்றுமையின் சின்னமாக திரு. கனகரத்தினம் விளங்குவதாகவும் வடக்கிலுள்ள ஒருவர் கிழக்கில் இந்நிலைக்கு வந்ததையிட்டுப் பெருமையடைவதாகவும் கூறினார்.

திரு. கனகரத்தினம் அளவெட்டியில் 3 நாட்கள் தங்கியிருந்து தொகுதிரீதியாக யு. என். பீ. கிளைகளை ஆரம்பித்து வைப்பார் என்றும் திரு. சிவராசா கூறினார். [க]

மத்திய கிழக்கு விவகாரம்:

# சதாத்-பெகின் கருத்து வேறுபாடு

கெய்ரோ, ஜன 15

மத்திய கிழக்கு விவகாரம் குறித்து இஸ்ரேல் கடைப்பிடித்து வரும் கொள்கை குறித்து எகிப்திய அதிபர் ஜனப் அன்வர்சதாத் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

இதேவேளையில், எகிப்திய அதிபரின் போக்கு குறித்து இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் வருத்தம் தெரிவித்துள்ளார்.

கைப்பற்றப்பட்ட அரபு பிரதேசங்களை மீண்டும் திருப்தி ஒப்படைப்பது குறித்து இஸ்ரேல் கடைப்பிடித்துவரும் கொள்கை காரணமாக எகிப்தும் தனது போக்கை மாற்றிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்று எகிப்திய அதிபர் ஜனப் அன்வர் சதாத் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

### அல்ஜீரியா ரஷ்யா கவலை

இதேசமயம் மத்திய கிழக்கு விவகாரம் குறித்த எகிப்திய அதிபரின் தற்போதைய கொள்கை அரபு மக்களைப் பெரிதும் பாதிக்கும் என்று ரஷ்யாவும், அல்ஜீரியாவும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கண்டித்துள்ளன.

## தசாக அழைப்பு

### மீனும்பாஅம்மாள்

பிங்கள ஆண்டு மார்கழி மாதம் 24ம் திகதி சிவபதமடைந்த எமது தாயாரின் தசாகம் முதலிய கிரியைகள் முறையே தை மாதம் 4, 5, 6, 7 (17, 18, 19, 20-1-78) திகதிகளில் நடைபெறும். இத் தினங்களில் பங்கு பற்றுமாறு உற்றார், உறவினர்நண்பர்களை அன்புடன் அழைக்கிறோம், சிவஸ்ரீ சம்புகேஸ்வரகுருக்கள், மகேஸ்வரகுருக்களும் அவர்களது குடும்பத்தினரும், ச. மகேஸ்வரகுருக்கள், ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம், நயினாதீவு. 8179

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்லோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜனவரி மாதம் 61-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No 49, Jaffna. Telegram Ee'a adu. Telephone 389. Registered as a Newspaper in Sri la ka

யாழ். லயன் சிறப்பு வீரர்கள்

# பரிசுபெற்ற கோஷ்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். லயன் கழகத்தால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட விழாவில் முதலாம் இடத்தை கொழும்பு ரட்ணம் விளையாட்டுக்கழகமும், இரண்டாம் இடத்தை இலங்கைப் பொலிஸ்கோஷ்டியும், மூன்றும் இடத்தை யாழ். சென். அன்ரனிஸ் கழகமும் தட்டிக் கொண்டன.

இவ் உதைபந்தாட்டப் போட்டியில் மிகச் சிறப்பாக விளையாடிய உதைபந்தாட்ட வீரர்கள் நால்வருக்கு இப் போட்டியை நடாத்திய யாழ்ப்பாணம் ரோறு ஸ்தாபனத்தார் வெற்றிக்கேடயங்களைப் பரிசளித்தார்.

'ரோறு'க் கேடயம் பெற்றோர் விபரம் பின்வருமாறு: முதலாவது போட்டி நெல்சன் பெரேரா, கொழும்பு சவுண்டேஸ், எஸ் அன்ரனிப்பிள்ளை- யாழ். சென் அன்ரனிஸ், இரண்டாவது இறுதிப்போட்டியில் கிளிமன்டி சில்வா பொலிஸ் கோஷ்டி, சீ. சீ. தாபிரே கொழும்பு ரட்ணம்ஸ். (கா)

யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில்

# பொன்விழா மண்டபம் அமைக்க தீர்மானம்

[அரியாலை]

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் ஸ்தாபகர் அமரர் கனகரத்தினத்தின் உருவச்சிலை ஒன்றை கல்லூரி முன்றலில் நிறுவுவதென்றும் கல்லூரியின் பொன்விழாவின் ஞாபகமாக பொன்விழாமண்டபமொன்றை கல்லூரிமுன்றலில் நிறுவுவதென்றும் பொன்விழா மலரொன்றைச் சிறந்த முறையில் வெளியிடுவதென்றும், யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் பொன்விழா அமைப்புக்குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் திரு. ஜே. எஸ். அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் பொன்விழாவின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்களாக கல்லூரி தேசியபேரவை உறுப்பினர் திரு. எம். சிவசிதம்பரம், வடபிரதேச வித்தியாதிபதி திரு நி. மாணிக்கவாசகர் ஆகியோரும் தலைவராக கல்லூரி அதிபர் திரு. ஜே எஸ். அரியரத்தினமும், செயலாளர்களாக திருவாளர்கள் வி. கதிரவேல், ஆ. தேவராசா ஆகியோரும் பொருளாளராக திரு. அ. உபயசேகரமும், பொருட்காட்சிக்குழு, கலைவிழாக் குழு, பொன்விழாமலர்க்குழு, விளையாட்டுக்குழு, நிதிக்குழு என்பவற்றிற்கு தனித்தனிப் பிரதிநிதிகளும், பொதுநிர்வாக சபையொன்றும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டது.

# நிர்வாக சேவையில் சித்திபெற்றார்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றிய திரு. பாலசுப்பிரமணியம் நிர்வாகசேவைப் பரீட்சையில் 3ம் தரத்தில் சித்திபெற்று, பதவி உயர்வுடன் நிர்வாகசேவை அதிகாரியாக வவனியா நகரசபைக்கு இன்று இடமாற்றலாகிச் செல்கிறார்.

அரசாங்கஊழியர்க்கிடையே நிர்வாகசேவைப் பரீட்சையை உள்ளூராட்சி அமைச்சு முதல் தடவையாக நடத்த ஏற்பாடு செய்திருந்தது.

400க்கு மேற்பட்டோர் விண்ணப்பங்களை பரீட்சையில் தோற்ற அனுப்பியிருந்தனர். 36 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அதில் ஆறு பேர் சித்திபெற்றனர். இந்த அறுவரில் நால்வர் சிங்களவர். இருவர் மட்டுமே தமிழர். இதில் திரு பாலசுப்பிரமணியமும் ஒருவர்.

சமய, விளையாட்டுப் போட்டிகள் பலவற்றில் ஈடுபாடு காட்டி பரிசுகள் பெற்றவர் இவர். யாழ். மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தின் செயலாளராக மூன்றுவருடகாலம் இவர் பதவியாற்றிய காலத்தில்தான் 4யாழ். தமிழ் வாலிபர்கள் இலங்கை உதைபந்தாட்டக்குழுவில் பிரதிநிதித்துவம் பெற்று மணிலா செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. [உ]

# விஸ்வமடு—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தாட்சிகள் வழங்கப்படவில்லை, காடு வெட்ட பணமில்லை. இத்தனை தொல்லைகளுக்கு மத்தியில் வாழவேண்டியுள்ளது.

இவர்கள் கடந்த மாதம், 15, 19, 21ம் திகதிகளில் குடியேற்றப்பட்டவர்கள். ஒருசில அரசாங்க கூடாரங்களில் மட்டும் வாழ்ந்து எமது வாழ்வைத் தொடங்கமுடியுமா என்றும் அவர்கள் கேட்கின்றனர். உடன் நடவடிக்கை எடுத்து தமது கஷ்ட நிலையைப் போக்குமாறு அவர்கள் வடபகுதி எம். பிக்களைக் கேட்டுள்ளனர். [கெ-இ]

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை பூபாலசிங்கம்

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பூபாலசிங்கம் காலமானார். இவர் விசாலாட்சியின் அன்புக் கணவரும் கந்தசாமி (லிப்டன்ஸ்) தனபாலசிங்கம் (விலங்கியல் ஆசிரியர் விக்டோரியா கல்லூரி), பரமேஸ்வரி, சகுந்தலா ஆகியோரின் தந்தையும், நவரட்ணம், மகாலிங்கம். வீரவாகு, பஞ்சாட்சரம், வாமதேவன் ஆகியோரின் சகோதரரும், சுசீலாதேவி, பதஞ்சலி ஆகியோரின் மாமனாரும் ஆவார். இறுதிச்சடங்குகள் [இன்று] 16-1-78 திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு மாவிட்டபுரத்தில் நடைபெறும். 8211